## விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திருமதி.சு.ஞானபிரபா, பி.எஸ்.சி.,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்

இடம் : விருதுநகர்.

**செ.மு.ஆணை. எண். அ1/4146/2023, நாள்: 04.11.2024.**

பொருள்: பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விருதுநகர் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV தேர்வு 2023 – இளநிலை உதவியாளர் பதவிக்கான தெரிவுதாரர் பட்டியல் பெறப்பட்டமை – திரு.ரா.முத்துகிருஷ்ணன் அவர்கள் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்தமை – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயலர் அவர்களின் கடிதம் எண். 1939/PSD-DZ/2023 நாள்: 04.09.2023.
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, வேலைவாய்ப்பு பிரிவு, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். நிர2/13013/2023 நாள்: 10.10.2023.
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1/4146/2023 நாள்: 11.10.2023.
3. திரு.ரா.முத்துகிருஷ்ணன், என்பவரின் பணியேற்பு விண்ணப்பம் நாள்: 18.10.2023.

*******

ஆணைகள்:

பார்வை (1)–இல் கண்ட இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, வேலைவாய்ப்பு பிரிவு, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி IV தேர்வில் தெரிவுசெய்யப்பட்டு விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இளநிலை உதவியாளராக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.ரா.முத்துகிருஷ்ணன், அவர்களுக்கு பார்வை (2)–இல் காணும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 18.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியேற்பு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு.ரா.முத்துகிருஷ்ணன் அவர்கள் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறிநெறி வழிகாட்டும் மையத்தில் 18.10.2023 முற்பகலில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார். எனவே, இவர் பணியில் சேர்ந்த நாளான 18.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து இதன் மூலம் ஆணைகள் வெளியிடப்படுகிறது.

–த.பி.பா–

திரு.ரா.முத்துகிருஷணன், இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 18.10.2023 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இவரது பணிவரன் முறை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள உரிமை மனுக்களின் மீது பிறப்பிக்கப்படும் இறுதி ஆணைகளுக்குக் கட்டுப்பட்டதாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
விருதுநகர்.

4/11/24 4/11/24

பெறுநர்:

திரு.ரா.முத்துகிருஷ்ணன், இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
விருதுநகர்.

நகல்:

1. பணிப்பதிவேடு
2. இருப்புக்கோப்பு